28.02.2024

அ.வ.எண். 937-2017

பி.வாசா.1 - பாலசுப்பிரமணியம்

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வாதிகளுடைய வழக்கு 2 வது அயிட்ட சொத்திற்கு வடபுறமாக உள்ள 0.64 1/2 ஏக்கர் பூமியை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கம்பிவேலி அமைத்துள்ளதால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எங்களுடைய பூமியை ஒரு நடராஜன் மற்றும் குமாரசாமி என்பவரிடம் இருந்து பி.வா.சா.ஆ.3 ன் மூலம் கிரயம் பெற்றுள்ளோம். அந்த 64 சென்ட் வருவாய்துறை ஆவணங்களில் 194/4 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கிரயம் கொடுப்பவர்களில் 1 இலக்கமிட்டவர்களில் 1956 ம் வருடத்திய கிரய பத்திரப்படி பாத்தியப்பட்டு அவர்கள் விற்றது போக மீதமுள்ள சொத்துக்களான க.ச.எண்.194 புல எண்ணில் சொத்து வாங்கப்பட்டதாக இல்லை.

அதேபோல் குமாரசாமி பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 194 சர்வே எண்ணில் எங்களுக்கு பூமி விற்பனை செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.3 ல் விற்பவர்களில் 6 மற்றும் 7 இலக்கமிட்ட ரத்தினம் மற்றும் ஜெயப்பிரகாஷ் ஆகியோரிடம் 194/4 நம்பர் பூமியில் கிரயம் பெற்றதாக குறிப்பு உள்ளது. அவர்களுக்கு 1975 செட்டில்மெண்ட் ஆவணப்படி 194/4 நம்பர் பூமி பாத்தியம். என்னிடம் காட்டப்படும் ஆவண எண்.659/1975 செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.3 ன் மூல ஆவணம் என்றால் ஆமாம், அந்த ஆவணத்தில் புல எண்.194 ற்கு உட்பிரிவு காட்டப்படவில்லை என்றால் ஆமாம், ஆனால் என்னுடைய ஆவணத்தில் நாங்கள் 30 வருடம் கழித்து வாங்கியதால் உட்பிரிவு சொல்லிதான் எழுதி வாங்கியுள்ளோம். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது இல்லாமல் மற்றொரு ஆவணம் 1976 ம் வருடத்தியது.

அந்த ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம், அது வா.சா.ஆ.19. அதுபோல் 194 புல எண் இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.18 ல் சொத்து விவரத்தில் 194 நம்பர் காலைக்கு

செக்குபந்தியில் ரங்கம்மாள் பூமிக்கும் வடக்கும் மேற்கும் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஆனால் அவர்களுக்கு அங்கு பூமி உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் ரத்தினம் மற்றும் ஜெயப்பிரகாஷிற்கு புல எண்.194/4 ல் பூமி உள்ளதாக குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல, நாங்கள் உட்பிரிவு எண்ணுடன் சேர்த்து தான் கிரயம் வாங்கியுள்ளோம். நாங்கள் கிரயம் வாங்கும்போது 194/4 புல எண் நடராஜன் பெயரில் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது.

பி.வா.சா.ஆ.3 கிரய ஆவணத்தில் நடராஜனுடைய மூல ஆவணமாக குறிப்பிடப்பட்டுள்ள 29.04.1956 தேதியிட்ட ஆவண எண்.597/1956 தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான், அது வா.சா.ஆ.20. மேற்படி வா.சா.ஆ.20 ல் நடராஜன் 194 காலையில் 5.42 1/2 ஏக்கர் பூமி கிரயம் பெற்றதாக எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதிகள் புல எண்.194 ல் 4.42 1/2 ஏக்கர் கிரயம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர் எவ்வளவு கிரயம் பெற்றார் என்பதெல்லாம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.20 ல் நடராஜன் 5.42 1/2 ஏக்கரில் வா.சா.ஆ.1 ன் மூலம் வாதிகளுக்கு 4.42 1/2 ஏக்கர் விற்பனை செய்தது போக மீதம் 1 ஏக்கர் வடபுறம் நிறுத்தி வைத்துக்கொண்டார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. நான் கிரய ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றேனா அல்லது வருவாய் துறை ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றேனா என்றால் இரண்டின் அடிப்படையிலும் ஆவணங்களை பார்வையிட்ட பின்னிட்டு தான் கிரயம் பெற்றேன்.

நடராஜனிடம் இருந்து குறிப்பிட்டு 194 காலையில் எவ்வளவு பூமி கிரயம் பெற்றோம் என்றால் தெரியவில்லை. எங்களுடைய பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 194/4 காலையில் நாங்கள் கிரயம் பெற்ற விஸ்தீரணம் 1.48 ஏக்கர் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி 1.48 ஏக்கரை யாரிடம் இருந்து குறிப்பிட்டு கிரயம் பெற்றோம் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் இல்லை. எனது பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள கிரய முன்னோர்களுக்கு பாத்தியப்படாத 1.48 ஏக்கர் பூமியை கிரயம் வாங்கிவிட்டு வாதியின் 64.5 சென்ட் நிலத்தை நாங்கள் ஆக்கிரமித்து கம்பிவேலி அமைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ல் 9 நபர்களிடம்

இருந்து அவர்களுக்கு தனித்தனியாக பாத்தியப்பட்ட சொத்துக்களை ஒரே பத்திரத்தின் கிரயம் பெற்றுள்ளோம் என்றால் ஆமாம், அனைத்து மூல ஆவணங்களையும் பரிசீலனை செய்து தான் வாங்கப்பட்டது.

ஜெயப்பிரகாஷ், ரத்தினம் பெயரில் 194/4 காலை உட்பிரிவு ஆகி உள்ளது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. ஜெயப்பிரகாஷ், ரத்தினத்திடம் இருந்து புல எண்.194/4 ல் 1.48 ஏக்கர் தான் நாங்கள் கிரயம் பெற்றுள்ளோம். மீதமுள்ள பூமி என்ன ஆனது என்றால் 1.48 ஏக்கர் புல எண்.194/4 ல் உட்பிரிவாகியுள்ளது, மீதமுள்ள வேறு உட்பிரிவு ஆகியிருக்கும், அது என்ன என்று ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். அவர்களிடம் இருந்த மீத சொத்தையும் நாங்களே கிரயம் பெற்றுவிட்டோம். பி.வா.சா.ஆ.3 லேயே மற்ற உட்பிரிவுகளும் சொல்லப்பட்டுள்ளது அதற்குள் மீத பூமி வரலாம். பிரச்சனைக்குரிய 64.5 சென்ட் நிலத்திற்குள் நாங்கள் என்ன பயிரிட்டுள்ளோம் என்றால் எங்களுடைய இடத்திற்குள் தென்னை மரங்கள் மற்றும் முருங்கை மரங்கள் வைத்துள்ளோம்.

நாங்கள் வேலி போடுவதற்கு முன்பு அது மானாவரி பூமியா என்று எனக்கு தெரியாது. வாதிகளின் பூமிக்கு கிழபுறம் எங்களது பூமி. வாதியின் பூமிக்கும் கிழபுறமும், எங்களது பூமிக்கு மேல்புறமும் தென்வடலாக கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது. வாதிகள் பூமிக்கு கிழபுறமாக ஒரு தென்வடல் வண்டிப்பாதை கொள்ளுப்பாளையத்தில் இருந்து மந்தை வரை இருந்தது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ல் 2 வது நபராக குமாரசாமிக்கு அதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் 21.08.1960 தேதியிட்ட ஆவண எண்.1741/1960 பாகப்பிரிவினை படி பாத்தியப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம், அந்த ஆவணத்தின் நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம் அது வா.சா.ஆ.21. அந்த ஆவணத்தில் B.அட்டவணை சொத்தில் தென்வடல் பொதுத்தடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தற்பொழுது தளத்தில் அவ்வாறு இல்லை, மொத்த சொத்தையும் நாங்கள் கிரயம் பெற்று விட்டோம்.

பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து மூல ஆவணங்களிலும் மேற்படி தென்வடல் பொதுத்தடத்தை மாமூல் தடம் என்றும், பொதுத்தடம் என்றும், தடம்

என்றும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தை பார்க்காததால் எனக்கு தெரியாது. தென்வடல் தடத்தை நாங்கள் வேலி போட்டு அழித்துவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி தென்வடல் தடத்தை வாதிகள் அனுபவம் செய்ய விடாமல் தடுப்பதற்காக கம்பிவேலி அமைத்து விட்டோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 கிரயம் கொடுத்தவர்கள் அனைவரும் அதிலுள்ள பொதுத்தடத்தை தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் இல்லை. வழக்கு சொத்தை சுற்றியுள்ள மற்ற சொத்துக்களை நாங்கள் மொத்தமாக கிரயம் வாங்கிவிட்டதால் எங்களுக்கு ஏற்றவாறு தடம் விட்டு பொதுத்தடத்தை அழித்துவிட்டோம் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தை சுற்றியுள்ள சொத்துக்களை நாங்கள் கிரயம் வாங்கும்பொழுது வாதியின் பூமியையும் குறைந்த விலைக்கு கேட்டோம் என்றால் சரியல்ல. அவர்கள் விவசாயிகள் அந்த பூமி தான் அவர்களுக்கு வாழ்வாதாரம் என்பதால் விலைக்கு கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. 06.04.2007 ல் கும்பலாக ஆட்களோடு சென்று வழக்கு சொத்தை ஆக்கிரமித்து கம்பிவேலி அமைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதன் பின்பு வாதிகள் எங்கள் மீது சூலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் அது பொய்யான புகார். அந்த புகாரின் மீது காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் வாதிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை தாக்கல் செய்து அதன் மூலம் உத்தரவு பெற்று எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்தனர் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

எங்களது செல்வாக்கை பயன்படுத்தி அந்த புகாரின் மீது காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவிடாமல் செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதனால் காவல் துறையினர் அந்த முதல் தகவல் அறிக்கையை MISTAKE OF FACT என முடித்து வைத்து விட்டனர் என்றால் சரியல்ல. அதற்கு பின்பு எங்கள் மீது வாதிகள் பல்லடம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தனிப்பிராது கொடுத்துள்ளனர் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பிராதில் 1 ம் பிரதிவாதி நிறுவனத்தின் உரிமையாளர்கள் நிர்வாகிகள் குற்றவாளிகளாக காட்டப்பட்டுள்ளதால் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி மனுவை நிராகரிக்க கேட்டு குற்றவியல் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது, அந்த மனு தற்போது வரை நிலுவையில்

உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

வாதிகள் மீது கோயம்புத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 760/2007 வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து அப்பொழுது பல்லடம் தாலுக்காவிற்குள் இருந்தும் வேண்டுமென்று வாதிகளை அலைக்கழிக்க மற்றும் பயமுறுத்தவும் ஒரு வீட்டு சொத்தை காட்டி இடைஞ்சல் செய்ததாக கோயம்புத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கை வேண்டுமெண்றே நடத்தாமல் தள்ளுபடிக்கு விட்டுவிட்டோம் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் இந்த வாதிகள் கடுமையான எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

இன்றுவரை வாதியை அவரது சொத்தில் அனுபவம் செய்து வர விடாமல் எங்களது நிறுவனமும், நிறுவனத்து ஆட்களும் தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு சில நாட்களுக்கு முன்பு வாதிகளின் சொத்தின் அத்துமீறி நுழைந்து அவர்களின் அனுபவத்தை இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல. எனவே வாதி வேறு வழியின்றி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. வாதிகளின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டு அதை நியாயப்படுத்த பொய்யான எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தரப்பினர் அல்லது பொது அதிகாரம் பெற்றவர் இல்லை என்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. எனவே வாதி கேட்டுள்ள நியாயமான பரிகாரங்கள் வழங்கி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/பாலசுப்பிரமணியம்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected

N RENUGA Digitally signed by N RENUGA Date: 2024.02.28 17:48:53 +0530

District Munsif
Sulur